
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கரும்பைத் தாக்கும் பூச்சிகளும், கட்டுப்படுத்தும் வழிகளும்**

First Published : 16 Jun 2011 12:06:02 AM IST



காஞ்சிபுரம்: விவசாயிகளுக்கு பொதுவாக கூடுதல் லாபம் தரும் மிகச் சிறந்த பயிர் கரும்பு. இந்த கரும்பு சமயங்களில் பூச்சி தாக்குதலுக்கு ஆளாகவும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு பூச்சி தாக்கும்போது கரும்பினை முறையாக பராமரிக்காவிட்டால் நஷ்டம் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.

கரும்பை பொறுத்தவரை குருத்து துளைப்பான், வெள்ளை ஈ, வேர்புழு, இலை தத்துப்பூச்சி உள்ளிட்ட பல்வேறு வகையான பூச்சிகள் தாக்குகின்றன.

குருத்து துளைப்பான்: இவ் வகையான தாக்குதலுக்கு ஆளாகும்போது கரும்பின் இளம் குருத்தை புழுக்கள் சாப்பிடும். இதனால் நடுக்குருத்து காய்ந்துவிடும். இப் புழுக்கள் வெண்மை நிறத்தில் இருக்கும். இதனை தடுக்க தேவையான அளவு மட்டுமே நீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்து 6 வாரங்கள் கழித்து மண் அணைக்க வேண்டும். தாக்கப்பட்ட நடுக்குறுத்துக்களை சேகரித்து அகற்ற வேண்டும், குளோர்பைரிபாஸ் 1000 மி.லி தண்ணீரில் கலந்து தெளித்து குருத்து துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.

வெள்ளை ஈ: இந்த தாக்குலுக்கு ஆளாகும்போது இலையில் உள்ள சாறுகளை பூச்சி உறிஞ்சும். இதனால் இலை பழுப்பு நிறமாக மாறிவிடும். இப் பூச்சிகளை கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமாக பசுந்தால் உரங்களை பயன்படுத்தக் கூடாது, ஒரு ஹெக்டருக்கு மானாகுரோடாபாஸ் 2 லிட்டர் தெளித்து வெள்ளை ஈயை கட்டுப்படுத்தலாம்.

வேர்ப் புழு: இப் புழு கரும்பை வேர் வழியாக உள்ளே சென்று தாக்கும். இத் தாக்குதலுக்கு ஆளான கரும்பில் தண்டு காயந்துவிடும். இலைகளும் மஞ்சள் நிறமாக மாறிவிடும். இவ்வகை பூச்சிகளை கட்டுப்படுத்த விளக்கு பொறி அமைக்க வேண்டும், தேவையான அளவு மட்டுமே நீர்பாசனம் செய்ய வேண்டும், பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும், லிண்டோன்

எனப்படும் மருந்தை ஹெக்டேருக்கு 50 கிலோ வீதம் வேர் பகுதியில் தூவ வேண்டும். இதன் மூலம் வேர்புழுவை கட்டுப்படுத்தலாம்.

இலை தத்துப்பூச்சி: இவ்வகை பூச்சிகள் இலையின் அடிப்புறத்தில் அமர்ந்து கொண்டு சாறை உறிஞ்சும் தன்மை கொண்டவை. இதனால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உதிர்ந்துவிடும். இதனைக் கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமாக பசுந்தாள் உரங்களை பயன்படுத்தக் கூடாது. விளக்குபொறி அமைத்தும் இப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மாலத்தியான் 2000 மி.லிட்டரை 1000 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து இப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இம் மருந்துகளை நடவு செய்து 5 மாதங்கள் கழித்தே பயன்படுத்த வேண்டும்.

கரும்புகளில் முறையாக பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும்போது நல்ல லாபத்தை பெறமுடியும். மேலும் கரும்புகளை சர்க்கரை ஆலைகளுக்கு தருவதுடன் தாங்களே சொந்தமாக வெல்லம் தயாரித்தும் கூடுதல் லாபம் பார்க்கலாம் என்று விவசாயத்துறை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

**மானாவாரி கம்பு சாகுபடி தொழில்நுட்பங்கள்: வேளாண் உதவி இயக்குநர் யோசனை**

First Published : 16 Jun 2011 09:05:26 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 15: குறைந்து வரும் கம்பு சாகுபடியை அதிகரிக்க மானாவாரி கம்பு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து திருநாவலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரவீந்திரன் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம்: மானாவாரி பருவ விதைப்புக்கு முன்பு கோடை உழவு மிகவும் சிறந்தது. கோடை உழவின்போது நிலம் முழுவதும் சரிசமமாக இருக்கும்படி ஒரு ஏக்கருக்கு 5000 கிலோ வீதம் பண்ணை எருவினை தூவி, உழவு செய்வதால் ஒரு ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து, 5 கிலோ நுண்ணுரம், 8 பாக்கெட் நுண்ணுயிர் போன்றவற்றை அடியுரமாக இடலாம்.

ஐசிஎம்வி 221, ஐசிஎம்வி 155 போன்ற ரகங்களையோ, தனியார் வீரிய ஒட்டு ரகங்களையோ ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் விதைப்பு செய்தால் போதுமானது. விதைப்புக்கு முன்பு 10 லிட்டர் நீரில் 1 கிலோ சாதா உப்பினை கரைத்து, அந்த உப்புக்கரைசலில் கம்பு விதைகளை ஊற வைக்கவும்.

இப்படி செய்யும்போது நோய் தாக்கப்பட்ட கம்பு விதைகள் மேலே மிதக்கும். பின்னர் மிதக்கின்ற விதைகளை நீக்கிவிட்டு, இதர தரமான விதைகளை சுத்தமாக நீரில் இரண்டு அல்லது மூன்று தடவை கழுவி, நிழலில் உலர்த்தி விதைப்பு செய்யலாம்.

மேலும் 2 சத பொட்டாசியம் குளோரைடு அல்லது 3 சத சோடியம் குளோரைடு கரைசலில் 16 மணி நேரம் கம்பு விதைகளை ஊற வைத்து, அதன் பின்பு 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி கம்பு விதைகளை விதைப்பு செய்யும்போது முளைப்புத்திறன் அதிகரிக்கிறது.

கம்பு விதைகளை மானாவாரியாக விதைக்கும்போது 45 செ.மீ. மற்றும் 15 செ.மீ. இடைவெளி இருக்கும்படி விதைப்பு செய்வது நல்லது. மேலும் காலத்தே களையெடுத்து, அதிகப்படியாக செடிகள் முளைத்திருந்தால், அவற்றை சரியான இடைவெளி விட்டு நீக்கிவிட வேண்டும். இப்படி

செய்யும்போது பக்கவாட்டில் கிளைகள் ஏற்பட்டு, அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த தேவை ஏற்படும்போது வேம்பு கலந்த பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம் என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாம்பழங்களை பாதுகாக்க பயோகோட்டிங் முறை!**

First Published : 16 Jun 2011 12:03:32 AM IST



பயோகோட்டிங் செய்யப்பட்ட மாம்பழங்கள்.

புதுச்சேரி: முக்கனிகளில் ஒன்று மா. இது கோடைகாலத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியது. இப்பழம் மதிப்பு கூட்டு தொழில்நுட்பத்தின்படி சாறாகவும், ஜாமாகவும் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.

இப்பழங்கள் இயல்பாகப் பறித்த நாளில் இருந்து சுமார் 4-வது நாள்களுக்குப் பிறகு பழுக்கத் தொடங்குகிறது. சுமார் 12 நாள்கள் வரை சாப்பிடுவதற்கு நல்ல நிலையில் இருக்கிறது. அதன் பின்னர் சுருங்குதல் மற்றும் அழுகல் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 1.28 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 7 லட்சம் டன் மாம்பழம் உற்பத்தியாகிறது. தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு 5,480 கிலோ மாம்பழம் கிடைக்கிறது. இப்பழங்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்பழங்கள் குறைந்த நாள்களுக்குள் குறிப்பிட்ட இடத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது. சில நேரங்களில் நீண்டதூர போக்குவரத்திலும் பயணிக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக மாம்பழங்கள் அழுகி வீணாகும் நிலை ஏற்படுகிறது. மேலும் விற்பனைக்கு வந்து விற்பனையாகாத நிலையில் சில தினங்களிலேயே இப்பழங்கள் அழுகி வீணாவது, ஆண்டுதோறும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மத்தியில் பெரும் பிரச்னையாகவே இருந்து வருகிறது. இதை குளிரூட்டு முறையில் பாதுகாப்பதும், குளிரூட்டு வசதி கொண்ட வாகனங்களில் கொண்டு செல்வதும் கூடுதல் செலவை ஏற்படுத்தும். இதைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு விவசாய அமைச்சகம், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவின் (ஐசஈஐஅச இஞமசஇஐக ஊஞத அஎதஐஇஅகபமதஅக தஉநஉஅதஇஏ) கட்டுப்பாட்டில் லூதியானாவில் இயங்கி வரும் சிப்பெட்

நிறுவனம் (இங்ய்ற்ழ்ஹப் ஐய்ள்ற்ண்ற்ன்ற்ங் ர்ச் டர்ள்ற் ஏஹழ்ஸ்ங்ள்ற் உய்ஞ்ண்ய்ங்ங்ழ்ண்ய்ஞ் பங்ஸ்ரீட்ய்ர்ப்ர்ஞ்ஹ்) மா மற்றும் கொய்யா பழங்கள் அழுகும் காலத்தை தள்ளிப் போடுவதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறது. தாவரப் பொருள்களில் இருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சை கொண்டு, மாம்பழம் மற்றும் கொய்யா மீது பூசுவதன் மூலம் இப்பழங்கள் பழுக்கும் காலத்தை மேலும் 4 நாள்கள் தள்ளிப்போவதை அறிந்தனர்.

இது குறித்து சிப்பெட் நிறுவனத்தின் தோட்டக்கலைத் துறை விஞ்ஞானி ரமேஷ்குமாரிடம் கேட்டபோது அவர் கூறியது: இந்தியாவில் விவசாயிகளின் உழைப்பில் கிடைக்கும் பழங்கள் விற்பனைக்கு வந்த சில தினங்களிலேயே சுருங்கியோ அல்லது அழுகியோ சாப்பிட முடியாத நிலைக்கு செல்கிறது.

இதனால் விவசாயிகளும், வியாபாரிகளும் நஷ்டம் அடைகின்றனர். வியாபாரிகள் இதை விற்பனை செய்ய மெழுகு பூச்சுகளை பயன்படுத்துகின்றனர். இதனால் மனிதர்களின் உடல் நலத்துக்கு கேடாகலாம். அதனால் எங்கள் ஆராய்ச்சியில் உண்ணக்கூடிய பயோ கோட்டிங் ஸ்டார்ச் முறையை உருவாக்கி இருக்கிறோம். இந்த பயோ கோட்டிங் ஸ்டார்ச் தாவரப் பொருள்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது. பழங்களுக்கு பயோ கோட்டிங் தருவதன் மூலம் அதை உண்ணும் மனிதனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை.

மேலும் பழங்கள் பழுக்கும் நாள்கள் தள்ளிப்போகிறது.

வழக்கமாக 12 நாள்கள் வரை தாங்கும் பழங்கள் ஸ்டார்ச் பயோ கோட்டிங் மூலம் மேலும் கூடுதலாக 4 நாள்களுக்கு பழங்கள் பழுப்பதையும், பழுத்த பின் சுருங்குவதையும், அழுகுவதையும் தடுக்கலாம். இந்த முறை தற்போது சோதனையில் இருக்கிறது. சில குறைகள் நீக்கிய பின் இந்த முறை செயல்பாட்டுக்கு வரும்.

ஸ்டார்ச்சில் பல வகை இருந்தாலும் அதில் பயன்பாட்டில் இருப்பது சிட்டோசன், கசாவா ஆகிய வகைகள். இதில் சிட்டோசன் ஸ்டார்ச் 100 கிராம் ரூ.7 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. கசாவா (மரவள்ளிக்கிழங்கில் இருந்து தயாரிக்கப்படுகிறது) ஸ்டார்ச் கிலோ ரூ.25-க்கு கிடைக்கிறது.

கசாவா ஸ்டார்ச் விலை குறைவு என்பதால் இது விவசாயிகளுக்கு உகந்தது. ஒரு லிட்டர் தண்ணீரில் 50 கிராம் கசாவா ஸ்டார்ச் கலந்து அதை 10 குவின்டால் பழங்களுக்கு பயன்படுத்தலாம். ஸ்டார்ச் கலந்த நீரில் பழங்களை அமுக்கி எடு6த்து, 15 நிமிடங்கள் நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் அப்பழங்களை வெளியூருக்கு அனுப்பும் பணிகளை தொடரலாம். இந்த பயோ கோட்டிங் முறை விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்றார்.

**அணைகளின் நீர் மட்டம்**

First Published : 15 Jun 2011 10:19:03 AM IST

பொள்ளாச்சி, ஜூன் 14: பொள்ளாச்சி அருகே உள்ள அணைகளின் நீர்மட்டம்.

சோலையாறு: மொத்த கொள்ளளவு 160 அடி, தற்போதைய நீர்மட்டம் 76.77 அடி, நீர்வரத்து 575 கனஅடி, வெளியேற்றம் இல்லை.

பரம்பிக்குளம்: மொத்த கொள்ளளவு 72 அடி, தற்போதைய நீர்மட்டம் 57 அடி, நீர்வரத்து 174 கன அடி, வெளியேற்றம் 55 கனஅடி, மழையளவு 28மிமீ.

ஆழியாறு: மொத்த கொள்ளளவு 120 அடி, தற்போதைய நீர்மட்டம் 99.25, நீர்வரத்து 174 கனஅடி, வெளியேற்றம் 365 கனஅடி.

அமராவதி: மொத்த கொள்ளளவு 90 அடி, தற்போதைய நீர்மட்டம் 42.76 அடி, நீர்வரத்து 43 கனஅடி,வெளியேற்றம் 10 கனஅடி.

**நஷ்டத்தை ஈடு செய்ய குறைந்த விலை பால் பாக்கெட் விற்பனை நிறுத்தம்: ஆவின் அதிரடி**

எஸ்.கே. ரவி

First Published : 15 Jun 2011 03:00:52 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 14: நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் குறைந்த விலையில் விற்கப்பட்ட பால் பாக்கெட் (குறைந்த கொழுப்பு சத்து உள்ள - நீல நிற பாக்கெட்) விற்பனையை நிறுத்தி, அதிக விலை கொண்ட பால் பாக்கெட்டுகளை விற்பனை செய்ய ஆவின் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. மேலும் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட அட்டை முறையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆவின் நிர்வாகத்தின் இந்த திடீர் முடிவு வாடிக்கையாளர்களை அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது.

÷கிருஷ்ணகிரியில் உள்ள தமிழ்நாடு மத்திய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நாள்தோறும் சராசரியாக 1.20 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பசும்பால் லிட்டர் ரூ.16-க்கும், எருமை பால் லிட்டர் ரூ.20-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்யப்படும் பாலில் நாள்தோறும் 80 ஆயிரம் லிட்டர் பால் சென்னை நகருக்கு அனுப்பப்படுகின்றன. மீதம் உள்ள பால், பால் பவுடர் உற்பத்தி போக தினசரி வாடிக்கையாளர்கள், அரசு நிறுவனங்கள்,அரசு மருத்துவமனைகள், தனியார் நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் உள்ளிட்டவைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

÷கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் 19 ஆயிரம் ஆவின் வாடிக்கையாளர்களுக்கு நீலம் மற்றும் பச்சை நிற பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. 3.5 சதவீதம் கொழுப்பு சத்து கொண்ட நீல நிறம் கொண்ட அரை லிட்டர் பாக்கெட்டு ரூ.10-க்கும், 4.5 சதவீதம் கொழுப்பு சத்து

கொண்ட பச்சை நிற அரை லிட்டர் பாக்கெட் ரூ.13-க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் குறைந்த கொழுப்பு சத்துள்ள நீல நிற பால் பாக்கெட்டுகளுக்கான விற்பனை நிறுத்தப்பட்டு, பச்சை நிற பால் பாக்கெட்டுகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் ஆவின் பால் நுகர்வோர் பாக்கெட் ஒன்றுக்கு ரூ.3 கூடுதல் விலை கொடுத்து பச்சை நிற பால் பாக்கெட்டுகளை வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் நுகர்வோர் மாதத்தில் பாலுக்காக லிட்டருக்கு 200 வரை கூடுதல் செலவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இது நடுத்தர வருவாய் உள்ளவர்களை பாதித்துள்ளது.

÷இதுகுறித்து ஆவின் நிர்வாகத்தை தொடர்பு கொண்டபோது, "பால் உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக விலைக்கு பால் கொள்முதல் செய்யப்பட்டு, நுகர்வோருக்கு குறைந்த விலையில் பால் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் நாள் ஒன்றுக்கு ஆவின் நிர்வாகத்துக்கு ரூ.1.5 லட்சம் நஷ்டம் ஏற்படுகிறது. நஷ்டத்தை ஈடுசெய்யும் வகையில் குறைந்த கொழுப்பு சத்துள்ள நீல நிற பால் பாக்கெட்டுகளுக்கான விற்பனை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆவின் நிர்வாகத்துக்கு ஏற்பட்டுவரும் நஷ்டம் சிறிதளவு தவிர்க்கப்படும். மேலும் மாதந்தோறும், விருப்பமுள்ள நுகர்வோரிடமிருந்து முன்பணமாக பெற்று அதற்கு ஒரு அட்டை வழங்கப்பட்டு குறைந்த விலையில் பால் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. போலி அட்டைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், அட்டை வழங்கும் திட்டமும் கைவிடப்பட்டுள்ளதாக' பெயர் குறிப்பிட விரும்பாத ஆவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

÷வாடிக்கையாளர்கள் எதிர்ப்பு: குறைந்த கொழுப்பு சத்துள்ள நீல நிற பாக்கெட்டுகளுக்கான விற்பனை கைவிடப்பட்டுள்ளதற்கு வாடிக்கையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கைக்குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பெரிதும் விரும்பி குறைந்த கொழுப்பு சத்து பாலை அருந்தி வந்தனர். தற்போது இந்த பாலுக்கான விற்பனை கைவிடப்பட்டுள்ளதால் தனியார் நிறுவனத்தினர் விற்பனை செய்யும் பாலை அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தும் நிலை உள்ளது.

÷குறைந்த சத்துள்ள பாலுக்கான விலையை சற்று உயர்த்தி, மீண்டும் நீல நிற பால் பாக்கெட்டை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஆவின் நுகர்வோரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 111.58 அடி**

First Published : 15 Jun 2011 01:17:18 PM IST

தஞ்சாவூர், ஜூன் 14: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 111.58 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,237 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 15,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து

வினாடிதோறும் காவிரி, வெண்ணாற்றில் தலா 1,057 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,011 கன அடி, கொள்ளிடத்தில் 151 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

**மானாவாரி கம்பு சாகுபடி தொழில்நுட்பங்கள்: வேளாண் உதவி இயக்குநர் யோசனை**

First Published : 16 Jun 2011 09:05:26 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 15: குறைந்து வரும் கம்பு சாகுபடியை அதிகரிக்க மானாவாரி கம்பு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து திருநாவலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரவீந்திரன் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம்: மானாவாரி பருவ விதைப்புக்கு முன்பு கோடை உழவு மிகவும் சிறந்தது. கோடை உழவின்போது நிலம் முழுவதும் சரிசமமாக இருக்கும்படி ஒரு ஏக்கருக்கு 5000 கிலோ வீதம் பண்ணை எருவினை தூவி, உழவு செய்வதால் ஒரு ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து, 5 கிலோ நுண்ணுரம், 8 பாக்கெட் நுண்ணுயிர் போன்றவற்றை அடியுரமாக இடலாம்.

ஐசிஎம்வி 221, ஐசிஎம்வி 155 போன்ற ரகங்களையோ, தனியார் வீரிய ஒட்டு ரகங்களையோ ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் விதைப்பு செய்தால் போதுமானது. விதைப்புக்கு முன்பு 10 லிட்டர் நீரில் 1 கிலோ சாதா உப்பினை கரைத்து, அந்த உப்புக்கரைசலில் கம்பு விதைகளை ஊற வைக்கவும்.

இப்படி செய்யும்போது நோய் தாக்கப்பட்ட கம்பு விதைகள் மேலே மிதக்கும். பின்னர் மிதக்கின்ற விதைகளை நீக்கிவிட்டு, இதர தரமான விதைகளை சுத்தமாக நீரில் இரண்டு அல்லது மூன்று தடவை கழுவி, நிழலில் உலர்த்தி விதைப்பு செய்யலாம்.

மேலும் 2 சத பொட்டாசியம் குளோரைடு அல்லது 3 சத சோடியம் குளோரைடு கரைசலில் 16 மணி நேரம் கம்பு விதைகளை ஊற வைத்து, அதன் பின்பு 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி கம்பு விதைகளை விதைப்பு செய்யும்போது முளைப்புத்திறன் அதிகரிக்கிறது.

கம்பு விதைகளை மானாவாரியாக விதைக்கும்போது 45 செ.மீ. மற்றும் 15 செ.மீ. இடைவெளி இருக்கும்படி விதைப்பு செய்வது நல்லது. மேலும் காலத்தே களையெடுத்து, அதிகப்படியாக செடிகள் முளைத்திருந்தால், அவற்றை சரியான இடைவெளி விட்டு நீக்கிவிட வேண்டும். இப்படி செய்யும்போது பக்கவாட்டில் கிளைகள் ஏற்பட்டு, அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த தேவை ஏற்படும்போது வேம்பு கலந்த பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம் என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆனைமலையில் கொப்பரை ஏலம்**

ஜூன் 16,2011,09:31



ஆனைமலை:ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 63.50 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 50 பேர் 87 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை மூன்று வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வன் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 42 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 60.70 ரூபாய் முதல் அதிகபட்சமாக 63.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 45 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 52.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 58.55 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**வேளாண் துறை அறிவுரை நிலக்கடலை விதை நேர்த்தி செய்யும் முறை**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,01:28 IST

நாமக்கல்: "நிலக்கடலை விதைப்புக்கு ஒரு மணி நேரத்துக்கு முன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நிலக்கடலை விதைப்புக்கு, 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் அளவில் கார்பெண்டாசிம் பூசன கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும். அதன்மூலம் விதை நேர்த்தி செய்ய முடியும். இது, வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களிலிருந்து பயிரைக் காக்கும். இதுபோல், ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன், 200

கிராம் ரைசோபியம், 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை அரிசிக் கஞ்சியுடன் கலந்து அந்த கலவையை விதையுடன் சேர்த்து கலக்க வேண்டும். அவ்வாறு விதை நேர்த்தி செய்த விதைகளை, 24 மணி நேரத்துக்குள் விதைத்துவிட வேண்டும். அதனால், பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கப்படும். அதுபோல், ஒரு ஏக்கரில் நடவு செய்ய, 600 முதல், 750 கிலோ வரை மஞ்சள் மலைக் கிழங்கு தேவைப்படும். அதை நடவுக்கு முன் ஒரு லிட்டர் நீரில் கார்பன்டாசிம் ஒரு கிராம் மற்றும் மோனோ குரோட்டோபாஸ், ஏழு மில்லி என்ற அளவில் கலந்த கரைசலில், 30 நிமிடங்கள் வரை ஊற வைத்து கிழங்கு அழுகல் நோய் மற்றும் செதில் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெரிய நெல்லி அறுவடை சீஸன் துவக்கம்:மகசூல் அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,01:28 IST

நாமக்கல்: பெரியமணலி அதன் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் நடவு செய்யப்பட்டுள்ள பெரிய நெல்லி அறுவடை சீஸன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்பார்த்த மகசூல் கிடைத்துள்ளதால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டத்துக்கு உட்பட்ட ராசிபுரம், திருச்செங்கோடு, பள்ளிபாளையம் பகுதிகளில், விவசாயம் பிரதானத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில், நீண்ட காலம் பலன் தரும் மலை நெல்லி எனப்படும் பெரிய நெல்லி விவசாயம் கணிசமான அளவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடவு செய்யப்பட்ட மூன்றாவது ஆண்டு முதல் பலன் தரும் பெரிய நெல்லி, தொடர்ந்து, 25 ஆண்டு வரை மகசூல் அளித்து வருகிறது. அதனால், பெரிய நெல்லி பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, திருச்செங்கோடு தாலுகாவுக்கு உட்பட்ட பெரியமணலி அதன் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் பெரிய நெல்லி விவசாயம் கணிசமான அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரிய நெல்லியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவற்றை ஊறுகாய் தயார் செய்யும் பிரபல தனியார் நிறுவனங்கள் நேரடியாக கொள்முதல் செய்து கொள்கின்றன. ஆண்டுக்கு இருமுறை பலன் தரும் பெரிய நெல்லியின் அறுவடை சீஸன் தற்போது துவங்கியுள்ளது. கணிசமான அளவு மழைப்பொழிவு இருந்ததால், நல்ல மகசூல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இதுகுறித்து ஏளூரைச் சேர்ந்த விவசாயி சண்முகம் கூறியதாவது: தோட்டக்கலைத் துறை மூலம் பெரிய நெல்லி கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 700 கன்றுகள் வீதம் நடவு செய்யலாம். முறையான பராமரிப்பின் மூலம் மூன்றாண்டுக்கு பின் தொடர்ந்து, 25 ஆண்டுகள் பெரிய நெல்லி பலன் தரும். பெரிய நிறுவனங்கள் மொத்தமாக கொள்முதல் செய்து கொள்கின்றனர். வெளி மார்க்கெட்டில் பெரிய நெல்லி ஒரு கிலோ, 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு இரு முறை பெரிய நெல்லியில் அறுவடை செய்யப்படும். தற்போது அறுவடை சீஸன் துவங்கியுள்ளது.

மகசூல் நன்கு உள்ளது. பெரிய நெல்லி மரக்கன்றில், அடிக்கரையான் பிடிக்காதபடி பார்த்துக் கொண்டால், விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**குப்பையோடு குப்பையாக வேளாண் கருவிகள்!**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,01:19 IST

ஈரோடு: ஈரோட்டில் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பல லட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன வேளாண் கருவிகள் குப்பையில் போட்டுள்ளனர். ஈரோடு மாவட்டம் ஜவுளித்தொழிலில் முன்னோடி மாவட்டம் என்றாலும், வேளாண் தொழிலே முதன்மையானது. பவானியாற்றின் மூலம் 2.40 லட்சம் ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. மாவட்டத்தில், மஞ்சள், நெல், கரும்பு, வாழை, தென்னை, காய்கறிகள் மற்றும் பல்வேறு பயறு வகைகள் பயிராகின்றன. வேளாண் துறையில் ஆண்டுதோறும் நவீன கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படுகிறது. நிலத்தை உழுவது முதல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை என அனைத்துக்கும் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. விவசாய கூலி வேலைக்கு ஆள் பற்றாக்குறையால், வேளாண் தொழில் அல்லோலப்படுகிறது. இப்பிரச்னையால் வேளாண் தொழில் அழிவதை தடுக்கும் நோக்கில், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கருவிகளை உற்பத்தியாகின்றன. தமிழகத்தில் மாவட்டந்தோறும் உள்ள வேளாண் பொறியியல் துறை மூலம், நவீன கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கும், சொந்தமாக வாங்க விரும்புவோருக்கு மானியத்துடன் பெற்றுத்தருவர். ஈரோடு சி.எஸ்.ஐ., சர்ச் அருகேயுள்ள வேளாண் அலுவலகத்தின் முன்புறம் காலியிடத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய வேளாண் கருவிகள் குப்பையாக போட்டு வைத்துள்ளனர். முற்றிலும் புதர் மண்டிய நிலையில், குப்பைக்கு நடுவில், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் கேட்பாரற்று கிடக்கின்றன. திறந்த வெளியில் போட்டுள்ளதால், மழை மற்றும் வெயிலால் கருவிகள் துருப்பிடித்துள்ளன. விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல லட்சம் ரூபாய் மதிப்புடைய வேளாண் கருவிகளை காப்பாற்ற வேண்டும்.

**உர வினியோகத்தை கண்காணிக்க கண்காணிப்பு குழுமம் அமைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,00:18 IST

கடலூர் : உர வினியோகத்தை கண்காணித்திட கண்காணிப்பு குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது குறுவை சாகுபடி பணி துவங்கியுள்ளது. இதற்கு தேவையான ரசாயன

உரங்கள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உர நிறுவனங்களில் தேவையான அளவு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. தரமான உரங்கள் போதிய அளவு விவசாயிகளுக்கு வழங்குவதை கண்காணிக்க கடலூர் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் கண்காணிப்பு குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுமம் தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 6 மணிவரை செயல்படும். விவசாயிகள் உரம் சம்பந்தமான புகார்களை 04142-290658 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**பருத்தி-மக்காச்சோளம் உற்பத்தியில் பெரம்பலூர் மாநிலத்தில் முதலிடம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,23:58 IST

பெரம்பலூர்: ""பெரம்பலூர் மாவட்டம் பருத்தி மற்றும் மக்காச்சோள உற்பத்தியில் மாநிலத்தில் முதலிடம் வகிக்கிறது," என மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் காந்திநகர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உள்ள காலியிடங்களையும், இளநிலை உதவியாளர் மற்றும் போலீஸார் உள்ளிட்ட பணியிடங்களை நிரப்பவும், உயர்நிலை அலுவலர்களை நியமனம் செய்து மேம்பாடு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், இந்திய பருத்திக் கழகம் மூலமாக ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு வெளியூர் வியாபரிகளை அழைத்து கலந்தாய்வு கூட்டம் நடத்திட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.
சுற்றுச்சுவர் கட்டவும், மின் விளக்குகளை சரி செய்து, தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திடவும், பருத்தி சாகுபடிக்கு முன்னதாக இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடித்து ஒழங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விவசாயிகளுக்கு பருத்தி விற்பனை செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் அவர் கூறியதாவது: பருத்தி, மக்காச்சோளம் உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டம் மாநிலத்தில் முதலிடம் வகிக்கிறது. 2009- 2010ம் ஆண்டில் 23,954 ஏக்கரில் இரண்டு லட்சத்து 22 ஆயிரத்து 772 குவிண்டால் உற்பத்தி செய்யப்பட்டது. மக்காச்சோளம் 2009- 2010ம் ஆண்டு 39,046 எக்டேரில் ஒரு லட்சத்து 83 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருக்கும் உரக்கிடங்கு, ஏல அரங்கு உள்ளிட்ட இடங்களை பயன்படுத்தி, சாகுபடி செய்யப்படும் பருத்தியை சந்தைப்படுத்திட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்படும். இங்கு நெல், சோளம், கம்பு, ராகி, மணிலா, எள், மிளகாய், உளுந்து, பருத்தி, மரவள்ளி, மஞ்சள், முந்திரி, வெள்ளம் ஆகியவற்றை விற்க ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை அணுகலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,23:55 IST

அரியலூர்: அரியலூரில் வரும் 17ம் தேதி விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் கலெக்டர் அனு ஜார்ஜ் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வரும் 17ம் தேதி, காலை 11 மணிக்கு, அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள, மக்கள் குறைதீர் மன்றத்தில் நடக்கிறது. இக்கூட்டத்தில், வேளாண்மை சம்பந்தப்பட்ட நீர்பாசனம், வேளாண்மை கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும். அன்றைய தினம் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிதிநிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்

**மானாவாரி மகசூலுக்கு கோடை உழவு அவசியம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,23:08 IST

ஒட்டன்சத்திரம் : ""மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் பெற கோடை உழவு அவசியம்," என, ஒட்டன்சத்திரம் வோளண்மை உதவி இயக்குனர் முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: ஒட்டன்சத்திரம் பகுதியில் 60 சதவீத வேளாண் மை நிலங்களில் மக்காச்சோளம், சோளம், பருத்தி, பயறு வகைகள் மானாவாரியாக சாகுபடி செய்யப்படுகின்றன. மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கு கோடை உழவும் முக்கிய தொழில் நுட்பமாக உள்ளது. ஏப்ரல், மே, ஜூன் ல் செய்யப்படும் கோடை உழவானது அடுத்து பெறப்படும் மழை நீரை ஈர்த்து சேமித்து, விதைக்கபடும் பயிர்கள் வளர்வதற்கு பேருதவியாக அமைகிறது. மேலும் பயிர்களை தாக்கக்கூடிய மண்ணில் தங்கியுள்ள பூச்சிகளின் புழுக்கூடுகளும் உழவு செய்யும் போது வெளியே கொண்டு வரப்பட்டு அவை அழிக்கப்பட்டு விடுகிறது. இதனால் விதைக்கக் கூடிய பயிர்களும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் இல்லாமல் ஆரோக்கியமா செழித்து வளர முடிகிறது. எனவே விவசாயிகள் கோடை உழவு அவசியம் செய்ய வேண்டும். கோடை வெப்பத்தின் பலனை முழுமையாக பயன்படுத்தி நல்ல மகசூல் பெற சட்டிக்கலப்பைகள் கொண்டு ஒரு முறையும், சாதாரண கலப்பைகள் கொண்டு இருமுறையும் உழவேண்டும், என்றார்.

**பருப்பு விலையில் மாற்றமில்லை**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,23:21 IST

சிவகங்கை : சிவகங்கையில் மளிகை பொருள் விலை விபரம் (கிலோ): துவரம் பருப்பு- 65; 58க்கு விற்ற 2 வது ரகம் -55; தட்டப்பயறு-62; நாடு -52; கடலை பருப்பு- 38; 2 வது ரகம் -36; உளுந்தம் பருப்பு- 70; 2 வது ரகம் -65; வெள்ளை கொண்டைக் கடலை -62; 2 வது ரகம் 52; சிவப்பு கொண்டைக்கடலை-36; 2 வது ரகம்- 31; 68க்கு விற்ற பாசிப் பருப்பு-65; 2 வது ரகம் -63; பாசிப் பயறு-65; 2 வது ரகம் -59; 50 க்கு விற்ற மொச்சைப் பயறு- 48; வெள்ளை மொச்சை- 70; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 28; மல்லி- 70; 2 வது ரகம் -58; புதுப்புளி - 90; பழைய புளி - 100; பொரி கடலை -48; வத்தல் புதியது- 90; பழசு-75; மலைப் பூண்டு-120; தரப்பூண்டு- 80; வெல்லம் -34; கருப்பட்டி (வேம்பார்)- 75; 27.50க்கு விற்ற சர்க்கரை -28; சோம்பு- 130; வெந்தயம்- 340; கசகசா- 280; சீரகம்-170; கடுகு- 380; 300க்கு விற்ற மிளகு -380; மஞ்சள் -120 ரூபாய். அரிசி(கிலோ): கல்சர் பொன்னி- 22; புதுசு- 23; டீலக்ஸ் பொன்னி- 26; புதுசு- 22; ஐ.ஆர்.20 -20; செல்லப்பொன்னி -22; புதுசு- 20; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 22; இட்லி அரிசி- 23; கோதுமை -24; சோளம் -17; கம்பு -20; 17க்கு விற்ற கேப்பை -18; 36க்கு விற்ற வரகரிசி -40 ரூபாய். எண்ணெய்: கடலை எண்ணெய் -88; பாமாயில் -69; நல்லெண்ணெய் -110, தேங்காய் எண்ணெய் -120 ரூபாய்.

**இயற்கை விவசாய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஜூன் 15,2011,23:58 IST

திருப்போரூர் : திருப்போரூரில், இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு நடந்தது. திருப்போரூரில் இந்தியன் வங்கி, பெடரல் வங்கி மற்றும் பேரூராட்சி ஆகியவை இணைந்து இயற்கை விவசாய கருத்தரங்கை நடத்தியது. திருப்போரூர் வேளாண்மை உதவி இயக்குனர் கனிங்ஸ்டன் தலைமை தாங்கினார். திருப்போரூர் மற்றும் சுற்றுபுற கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். இதில் இயற்கை உர பயன்பாடு, சாகுபடி முறைகள், மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவை குறித்து விவசாயிகள் கருத்து பறிமாறிக் கொண்டனர். தஞ்சாவூர் விவசாயி சித்தர் சாகுபடி குறித்து விளக்கினார். விவசாயிகளுக்கு கையேடு வழங்கப்பட்டது. பேரூராட்சி செயல் அலுவலர் கேசவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி

# மே மாதத்தில் ரப்பர் இறக்குமதி 16,293 டன்னாக உயர்வு



எஸ் சனந்தகுமார்

கொச்சி

நடப்பு ஆண்டு மே மாதத்தில் நாட்டின் ரப்பர் இறக்குமதி 16,293 டன்னாக உயர்ந்துள்ளது. முந்தைய மாதத்துடன் (6,518 டன்) ஒப்பிடும்போது இது சுமார் மூன்று மடங்கு அதிகமாகும்.

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் ரப்பர் உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 4.6 சதவீதம் உயர்ந்துள்ளது. மே மாதத்திற்கான புள்ளி விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. இருப்பினும் அம்மாதத்திலும் உற்பத்தி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக, உள்நாட்டில் ரப்பர் அளிப்பு அதிகரித்துள்ளது. இந்நிலையிலும் சென்ற மே மாதத்தில் ரூ.217–ஆக இருந்த ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை இவ்வாரம் திங்கள்கிழமை அன்று ரூ.226–ஆக உயர்ந்துள்ளது. இது ரப்பர் பயிரிடுபவர்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய செய்தியாகும்.

ரப்பர் உற்பத்தி குறித்து பாளை ரப்பர் விற்பனை கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கே கே ஆப்ரஹாம் கூறுகையில், " நம்நாட்டில் ரப்பர் அதிக அளவில் உற்பத்தியாகும் கேரள மாநிலத்தில், பரவலாக மழை பெய்து வருவதால் இதன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வரும் மாதங்களில் ரப்பர் உற்பத்தி குறைந்து விடும். எனவே ரப்பர் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார்.

மேலும் டயர் தயாரிப்பு நிறுவனங்களும் இயற்கை ரப்பரை அதிக அளவில் வாங்கி வருகின்றன.

## கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.4.26 லட்சம் கோடியை தாண்டியது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் இந்திய வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.4.26 லட்சம் கோடியை தாண்டியுள்ளது. அவ்வாண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.3.75 லட்சம் கோடியையும் தாண்டி வேளாண் கடன் சுமார் ரூ.50,000 கோடி அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வங்கிகள்

சென்ற நிதி ஆண்டில் வணிக வங்கிகள் மட்டும் ரூ.3.14 லட்சம் கோடியை விவசாய கடனான வழங்கியுள்ளன. கூட்டுறவு வங்கிகள் ரூ.69,000 கோடியும், மண்டல ஊரக வங்கிகள் ரூ.43,000 கோடியும் கடன் வழங்கியுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு நிர்ணயிக்கும் இலக்கை தாண்டி வங்கிகள் வெற்றிகரமாக வேளாண் கடனை வழங்கி வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் ரூ.4.75 லட்சம் கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006–07–ஆம் நிதி ஆண்டிலிருந்து குறுகிய கால கடன்களுக்கு வட்டியில் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

2009–10–ஆம் நிதி ஆண்டில், குறுகிய கால பயிர்க் கடனை குறித்த காலத்தில் திரும்ப செலுத்திய விவசாயிகளுக்கு வட்டியில் ஒரு சதவீத தள்ளுபடி சலுகை வழங்கி, அந்த சுமையை அரசே ஏற்றுக் கொண்டது.

2010–11–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், குறித்த காலத்தில் கடனை

திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் மேலும் ஒரு சதவீதம் தள்ளுபடி சலுகை அளித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனையடுத்து இத்தகைய விவசாயிகளுக்கு 5 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2011–12–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் மேலும் ஒரு சதவீத தள்ளுபடி சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் கடனை சரிவர செலுத்தும் விவசாயிகளிடம் 4 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். இதனால் வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடு செய்யும்.

390 சதவீத வளர்ச்சி

கடந்த 2003–04–ஆம் நிதி ஆண்டில் இந்திய வங்கிகள் வழங்கிய விவசாய கடன் ரூ.86,981 கோடியாக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.4,26,531 கோடியாக அமோக வளர்ச்சி கண்டுள்ளது. இது, 390 சதவீத வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நடப்பு நிதி ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட் வேளாண் கடன் இலக்கை எட்டும் வகையில் நம் நாட்டு வங்கிகள் ஊக்கத்துடன் செயலாற்றி வருகின்றன.

## நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு விவசாய சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் தேயிலை வாரிய செயல் இயக்குனர் வேண்டுகோள்



சிறு விவசாய சங்க உறுப்பினர்களுக்கு எந்திரத்தின் உதவியுடன் இலை பறித்தல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்ட காட்சி.

குன்னூர், ஜூன்.16–

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு விவசாய சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட

வேண்டும் என்று தேயிலை வாரிய தென்மண்டல செயல் இயக்குனர் அம்பல வாணன் கூறினார்.

சிறு விவசாயிகள் சங்கம்

தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து தேயிலை தர மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் அவைகள் செயல் பட்டு வருகின்றன.

கோத்தகிரி பகுதியில் உள்ள ஆடதொரையில் 5 தேயிலை சிறு விவசாயிகள் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இந்த சங்கங்களின் தொடக்க விழா ஆடதொரை கிராமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் கலந்து கொண்டு சங்கங்களை தொடங்கி வைத்து சான்றிதழ் களை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:–

நஷ்டம்

நீலகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மற்ற பயிர்களை ஒப்பிடும் போது தேயிலை சாகுபடி மிகவும் லாபகரமான தொழிலாக உள்ளது. வருடத்தில் ஒரு சில மாதங்களை தவிர மற்ற மாதங்களில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் காப் பாற்றி வருகிறது.

தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் ஒன்றிணைந்து தேயி லைக்கு கூடுதல் விலை கிடைக்க பல்வேறு நடவடிக் கைகளை மேற் கொண்டு வருகிறது.

தரமானதாக பறிக்க வேண்டும்

தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சிறு விவசாயி கள் சங்கம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சிறு விவசாய சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அப்போது தான் தரமான தேயிலையை தயாரிக்க உதவ முடியும்.நீலகிரி தேயிலை தூளை தரமாக தயாரிக்க வேண்டும் எனில் அதன் மூலப் பொரு ளான பச்சை தேயிலை கொழுந்தை தரமானதாக பறிக்க வேண்டும். தரமான பச்சை தேயிலை கொழுந்து கிடைக்க 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேயிலை செடியை கவாத்து செய்ய வேண்டும்.

சிறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தை நல்ல முறையில் பராமரித்து தரமான பச்சை தேயிலை கொழுந்தை பறிக்க வேண்டும். அப்போது தான் தேயிலைக்கு உரிய விலை கிடைக்கும். தற்போது விவ சாய சங்கங்கள் தரமான பச்சை தேயிலையை வழங்கி வருகின்றன.

தேயிலை தோட்டத்தை நல்ல முறையில் பராமரித்து தகுந்த விலையை பெறுவதற்கு தேயிலை வாரியம் அனைத்து உதவிகளையும் செய்யும். தேயிலை வாரியத்தின் உதவி

களை சரியான தருணத்தில் பெறுவதற்கு விவசாய சங்கங்கள் வரப்பிரசாதமாக உள்ளது.

இவ்வாறு தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பல வாணன் பேசினார்.

செயல்முறை விளக்கம்

நிகழ்ச்சியில் உபாசி வேளாண்மை அறிவியல் மைய தர மேம்பாட்டு திட்ட தலைமை விஞ்ஞானி ராம மூர்த்தி, விவசாய சங்க ஒருங் கிணைப்பாளர் சென்னராஜ் ஆகியோர் பேசினர். நிகழ்ச் சியையொட்டி சிறு விவசாயி கள் சங்க உறுப்பினர்களுக்கு எந்திரங்களால் இலை பறித்தல், கவாத்து செய்தல் ஆகியவை குறித்து செயல் முறை விளக்கம் அளிக்கப்பட் டது.

## கோத்தகிரி பகுதியில் காட்டெருமைகளால் காய்கறி பயிர்கள் சேதம் விவசாயிகள் கவலை

கோத்தகிரி, ஜூன்.16–

காட்டெருமைகள் காய்கறி பயிர்களை சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

காய்கறி சாகுபடி

கோத்தகிரி சுற்று வட்டா ரத்திற்கு உட்பட்ட பகுதியில் அதிகளவு தேயிலை சாகுபடி யில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். சமீப காலமாக பச்சை தேயிலைக்கு கட்டுபடி யான விலை கிடைப்பது இல்லை.

தற்போது ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.7 மட்டுமே கிடைத்து வருகிறது. விலை குறைவு காரணமாக சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் கூட செலுத்த இயலாமல் உள்ளனர்.

நீர் ஆதாரம் உள்ள கிளப் ரோடு, மிளிதேன், இந்திரா நகர், கப்பட்டி, கேர்கம்பை, வ.உ.சி. நகர், காவிலோரை, நெடுகுளா, சேலக்கொரை, சுண்டட்டி, ஈளாடா, கதவுத் தொரை, பட்டக்கொரை ஆகிய பகுதிகளில் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

காட்டெருமைகள் உலா

கேரட், முட்டைகோஸ், கறிபீன்ஸ், அவரை, குடை மிளகாய், பீட்ரூட், கிழங்கு உள்பட பல்வேறு மலை தோட்ட பயிர்கள் விளைவிக் கப்படுகிறது. ஆனால் விவசாய நிலங்கள் அமைந்துள்ள அனைத்து கிராமங்களும் வனப்பகுதியை ஒட்டி அமைந் துள்ளது. வனப்பகுதியில் காட்டு எருமைகள், காட்டு பன்றிகள் உள்பட அனைத்து வன விலங் குகள் வசித்து வருகின்றன. கோத்தகிரியில் உள்ள நகர பகுதிகளான ராம்சந்த், டானிங்

டன், ஹேப்பிவேலி, அணை யட்டி ஆகிய பகுதிகளில் பகல் வேளையில் காட்டெருமைகள் சர்வ சாதாரணமாக உலா வருவதை காணலாம்.

சேதம்

அதே போல் மாலை மற்றும் இரவு வேளையில் காய்கறி தோட்டங்களுக்குள் காட்டெ ருமைகள் கூட்டம் கூட்டமாக புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தி வருகின்றது. இதனால் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயி களுக்கு அதிகளவு சேதம் ஏற்பட்டு வருகிறது.

காட்டெருமைகளின் இனப்பெருக்கம் அதிகரித்து உள்ளதும், காடுகளில் அதற்கு தேவையான உணவு பற்றாக் குறைவு காரணமாக விவசாய நிலங்களை நோக்கி காட்டெ ருமைகள் படை யெடுத்து வருகின்றன.

கவலை

தேயிலைக்கும் கட்டுபடியான விலை கிடைப்பதில்லை. காய்கறிகளுக்கு ஓரளவு கட்டுபடியான விலை கிடைத்தாலும் வன விலங்கு களிடம் இருந்து பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் கவலை யில் உள்ளனர்.

எனவே காட் டெருமைகளிடம் இருந்து விவசாய பயிர்களை காப் பாற்றிட வனத் துறையினர் தேவை யான முயற்சி களை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.



# வேளாண்மை செய்திகள்

## மல்பெரியை தாக்கும் சாம்பல் நோய்



தமிழ்நாட்டில் கோடை, மழை காலங்களை ஒப்பிடும் போது குளிர்காலமே இயற்கையில் பட்டுப்புழு வளர்ப்பிற்கு ஏற்ற தட்ப வெட்ப நிலையை கொண்டு உள்ளது. எனவே சர்வதேச தரம் வாய்ந்த வெண்பட்டு புழுக்கள் குளிர் காலத்திலேயே பெரும ளவு வளர்க்கப்படுகின்றன.

**சாம்பல் நோய்**

ஆனால் குளிர் காலத்தில் மல்பெரி செடிகளை தாக்கும் சாம்பல் நோயால் மல்பெரி இலைகளின் விளைச்சலும், தரமும் குறைந்து விடுவதால் பட்டுப்புழுக்களின் வளர்ச்சியும், பட்டுக்கூடு விளைச் சலும் பாதிப்படைகிறது. எனவே விவசாயிகள் மல்பெரி தோட்டத்தில் சாம்பல் நோய் தாக்குதலை கண்டறிந்து கட்டுப்படுத்துவது அவசி யம்.

பிளாக்டினியா, கொரிலியா என்றழைக்கப்படும் பூஞ்சாணத்தின் தாக்குதலே மல்பெரி செடிகளில் ஏற்படும் சாம்பல் நோய்க்கு கார ணம் ஆகும். இப்பூஞ்சாண வித்துக்கள் காற்றில் பரவி மல்பெரி இலைகளின் மீது படிந்து இலைகளில் உள்ள சத்துக்களை உறிஞ் சி வளர்கின்றன. பூஞ்சாணம் வளர்ந்த இலை சாம்பல் பூத்தது போல் காணப்படும். இதுவே சாம்பல் நோய் ஆகும்.

**அறிகுறிகள் என்ன?**

இந்தநோய் குளிர் பகுதிகளில் ஆண்டு முழுவதும் காணப்பட்டா லும், வெப்ப பகுதிகளில் மழை, குளிர் காலத்தில் மட்டுமே அதிக அளவில் தாக்குகின்றன. அதிக ஈரப்பதம் குறைவான வெப்பநிலை இந்தநோய் பரவுவதற்கு காரணம் ஆகும். ஆரம்ப நிலையில் பூஞ் சாணம் தாக்குதல் இலையின் அடிப்பரப்பில் ஆங்காங்கே சாம்பல் நிற வட்டுக்களாக தோன்றுகின்றன.

பின்னர் இவை படிப்படியாக வளர்ச்சி அடைந்து அடிப்பாகம் முழு வதும் பரவி இறுதியில் கரும்பழுப்பு நிறமாக மாறிவிடுகிறது. இதில் இருந்து ஏராளமான பூஞ்சாண வித்துக்கள் காற்றில் பரவி, மற்ற செடிகளையும் தாக்குகின்றன. இலையில் உள்ள சத்துக்களையும், ஈரப்பதத்தையும் உறிஞ்சுவதால், இலையின் மேற்பகுதி வெளிறி மஞ்சள் நிறமாகி பழுப்படைகிறது.

**விளைச்சல் பாதிப்பு**

தமிழ்நாட்டில் இந்த நோய் தாக்குதலால் மல்பெரி இலை விளைச் சல் 10 முதல் 15 சதவீதம் விழுக்காடு குறைவதாக கண்டறியப்பட்டு உள்ளது. இலைகளில் உள்ள ஈரப்பதம், சத்துக்கள் கணிசமாக குறைந்துவிடுவதால், உண்ணும் பட்டுப்புழுக்கள் வளர்ச்சி, ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு நோய் தாக்குதலுக்கு ஆளாகின்றன. இதனால் தரமற்ற மெலிந்த பட்டுக்கூடுகளை கட்டுகின்றன.

சாம்பல்நோய் அதிகம் தாக்கும் பகுதிகளில் எம்.ஆர்–2 ரக மல் பெரி செடிகளை பயிரிடவேண்டும். தோட்டத்தில் களைகளை அகற்றி நல்ல காற்றோட்டம் இருக்குமாறும், அனைத்து செடிகளும் சூரிய ஒளி கிடைக்குமாறும் பராமரிக்க வேண்டும். கவாத்து செய் தபின் 50 நாட்களுக்கு மேல் வயதான செடிகளில் இந்த நோயின் அடர்வு அதிகமாக காணப்படுகிறது.

**கார்பன்டசிம் கரைசல்**

நோய் தாக்கப்பட்டு பழுத்து உதிர்ந்த இலைகளை சேகரித்து எரித்துவிட வேண்டும். நோய் தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் 0.2 சதவீத கார்பன்டசிம் கரைசலை இலைகளின் அடிப்பாகம் நனையுமாறு தெளிப்பது அவசியம். தேவைப்படுமானால் 10 முதல் 15 நாள் இடைவெளியில் 2–வது தெளிப்பு செய்யலாம். தெளிப்பு செய்து 10 நாட்கள் கழித்தே இலைகளை பட்டுப்புழுக்களுக்கு உணவாக கொடுக்க வேண்டும்.

**–சக்திவேல், மோகன், ஆராய்ச்சி விரிவாக்க மையம், ஸ்ரீ வில்லிபுத்தூர்.**

## மிளகை தாக்கும் நூற்புழுக்களை கட்டுப்படுத்துவது எப்படி?



மிளகு பல்வேறு மருத்துவ குணங்கள், உணவில் சுவையை அதிகரிக்கும் தன்மை கொண்ட பணப்பயிர் ஆகும். மிளகு பயிரை 14 வகையான நூற்புழுக்கள் தாக்குவதாக கண்ட றியப்பட்டு உள்ளது. அவற்றுள் முக்கியமானது வேர்முடிச்சு நூற்புழு, துளையிடும் நூற்புழு ஆகியவை.

**நூற்புழு நோய்கள்**

இதில் வேர்முடிச்சு நூற்புழு தாக்கப்பட்ட கொடிகளின் முதன்மை வேர்கள் வீங்கி காணப்படும். பக்கவாட்டு வேர்களில் முடிச்சுகள் வீக்கங்களாக மாறி, வேரின் வளர்ச்சியை பாதிக்கும். எனவே நோய் தாக்கப்பட்ட கொடிகள் போதிய வளர்ச்சியின்றி மஞ்சளாக காணப்படும்.

துளையிடும் நூற்புழு செடிகளின் அடிப்பாகத்தின் அனைத்து பாகங்களையும், துளைக்கும் சக்தியை கொண்டிருப்பினும், வேர் நுனிப்பகுதியை தாக்கும். தாக்கப்பட்ட இடங்கள் நல்ல பழுப்புநிற நீள் புள்ளிகளை கொண்டிருக்கும். நாளடைவில் இவை ஒன்று டன் ஒன்று இணைந்து விரிவடைந்து வேர்ப்பகுதியை அழிக்கும்.

**கட்டுப்படுத்துவது எப்படி?**

புதிதாக உருவாகும் வேர்களும் தாக்கப்பட்டு அழிந்து விடும். தாக்கப்பட்ட செடிகள் மஞ்சள் நிறமாகி சக்தி குன்றி போதிய வளர்ச்சியின்றி காணப்படும்.

வேர்முடிச்சு நூற்புழுக்களால் தாக்கப்பட்ட வேர்ப்பகுதியில் முடிச்சுகள் காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமாக காணப்ப டும். இப்புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும் நிலையில் மிளகு விளைச்சல் பாதிக்கப்படும்.

நூற்புழு தாக்குதல் இல்லாத நாற்றுகளை தேர்ந்தெடுத்தல், நோய் தாக்குதல் அதிகம் உள்ள பயிர்களை பிடுங்கி அப்புறப்ப டுத்துதல், வேர் உட்பூசணம் கலந்த மண் கலவையை பயன்படுத் துதல், வெட்டுக்குச்சிகள் நட்ட பைகளில் சரிசம இடைவெளி களில் 2, 3 ஓட்டைகளை இட்டு அதனுள் போரேட் 1 கிராம், கார்போபியூரான் 3 கிராம் என்ற அளவில் பயன்படுத்துதல் வேண்டும்.

**நோய் எதிர்ப்பு ரகங்கள்**

மிளகுப்பயிர் நடும் குழிகளில் 15 கிராம் போரேட் அல்லது 30 கிராம கார்போபியூரான் மருந்தை இட்டு கொடிகளை நடவு செய்ய வேண்டும்.

ஒரு கொடிக்கு 15 கிராம் போரேட் அல்லது 30 கிராம் கார்போபி யூரான் என்ற அளவில் மே–ஜூன் மாதங்களில் ஒருமுறையும், செப்டம்பர்–அக்டோபர் மாதங்களில் ஒருமுறையும் இட வேண்டும். பஞ்சமி, பவுர்ணமி, பி.எல்.டி–2 ஆகிய மிளகு பயிர் ரகங்கள் நூற்புழு தாக்குதலை எதிர்க்கும் ரகங்கள் ஆகும். இவற்றை பயன்படுத்து வதன் மூலம் பயிர்களை பாதுகாக்கலாம்.

**–தகவல்: செந்தில்குமார், அருள்மொழியான், தோட் டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு.**

## கரும்பு தோகையை எரிக்காமல் உரமாக்குவது எப்படி?

### வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்



தமிழகத்தில் ஆயிரக்க ணக்கான ஏக்கர் பரப்பில் கரும்பு பயிர் செய்யப்ப டுகிறது. இவ்வாறு பயிர் செய்யப்படும் கரும்பு அறு வடைக்கு பிறகு அதன் தோகையை வயலிலேயே எரித்து விடுகின்றனர். இதன் காரணமாக ஒரு எக்டேருக்கு 25 டன் இயற்கை எரு வீணாகி றது.

**முளைப்பு திறன்**

இந்த எருவின் வாயிலாக கிடைக்கக்கூடிய 100 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச் சத்து மற்றும் கந்தகச்சத் துக்கள் கிடைப்பதில்லை. மேலும் மறு தாம்பின் முளைப்பு திறன் 30 சதவீதம் குறைந்து அதன் வளர்ச்சியும் தடைபடுகி றது. இதன் காரணமாக மண் ணில் வாழும் உயிரினங்களான நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

இந்த கரும்பு தோகையை எரிப்பதால் ஏற்படும் புகை கார ணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப் படுகிறது.

இவ்வாறு வீணாகும் கரும்பு தோகையை சிறந்த உரமாக மாற்றுவது குறித்து செய்யாறு வேளாண் உதவி இயக்குனர் சாந்தி விளக்கம் அளித்துள் ளார். இது குறித்து அவர் கூறிய தாவது:–

**அகலக் குழி**

கரும்பு வயலில் அறுவடை யான பின்பு வீணாக கிடக்கும் தோகையை சிறந்த உரமாக மாற் றுவதற்காக கரும்பு வயலின் ஒரு மூலையில் 9 அடி நீளம் 5 அடி அகலம் உள்ள ஒரு குழி எடுக்க வேண்டும். அந்த குழியில் 500 கிலோ கரும்பு தோகையை போட வேண்டும். அதன் மேல் வயலில் உள்ள மண் அல்லது கரும்பு ஆலைக்கழிவுகளை 500 கிலோ அளவுக்கு இட்டு அதன் மேல் 10 கிலோ பாஸ்பேட், 10 கிலோ ஜிப் சம், மற்றும் 5 கிலோ யூரியா கல வையைத் தூவ வேண்டும். இவ் வாறு வைக்கப்பட்டுள்ள குழியில் உள்ள அனைத்து பொருட்களும் நன்கு நனையும் படி தண்ணீர் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு உருவாக்கப்பட்டு உள்ள அடுக்கின் மேல் மாட்டு சாணம், மக்கிய எரு மற்றும் வயல் மண் கலந்த கரைசலை 500 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். இவ்வாறு குழு நிரம்பும் வண்ணம் 10 முதல் 15 அடுக்குகள் இடுவதன் வாயி லாக 5 டன் தோகையை உர மாக்கலாம்.

**தண்ணீர் தெளித்து பராமரிப்பு**

முடிவில் உரக்குழியை நில மட்டத்துக்கு மேல் அரைஅடி உயரம் மேடாகும் வகையில் மண் கொண்டு மெழுகி மூடி விட வேண்டும். மூன்று மாதம் கழித்து குழு முழுவதையும் நன்கு மக்குமாறு கலக்கிவிட வேண்டும்.

மக்கும் எரு நன்கு நனையு மாறு வாரம் ஒரு முறை தண் ணீர் தெளித்து பராமரிக்க வேண்டும். இவ்வாறு பராம ரிக்கும் போது 6 மாதத்துக்குள் அந்த மக்கிய கரும்பு தோகை உரம் தயாராகிவிடும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உரத்தை மீண்டும் கரும்பு பயி ரிடும் போது வயல் பரப்பில் உர மாக இடலாம் அல்லது மற்ற பயிர் ரகங்களான வெங்காயம், தக்காளி, கத்தரி, வெண் டைக்காய் உள்பட பல்வேறு பயிர்களுக்கு உரமாக இட்டு பயன்படுத்தி நல்ல பயன் பெற லாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,690–2,740

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,250–4,330

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,100–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,525–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,917–00

**நல்லெண்ணெய்**

குமாகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாச,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,700.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,180.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,535.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,120.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
565–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜுன்.15–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 115.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 95.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 98.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 52.00 |
| கபருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 33.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 69.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 40.00 |
| மொச்சை பயிறு (மூவனா) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜுன்.15–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 6,327
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8998
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்எம் (புதியது) ரூ. 12,122
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10,264
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,232
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,373
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,282

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜுன்.15–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | (கிலோவுக்கு) | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 50–00 | காலிப்பிளவர் | ரூ. | 28–32 |
| கத்தரிக்காய் | ரூ. | 18–24 | பொறியல் தட்டை | ரூ. | 20–24 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–24 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8–10 | தேங்காய் | ரூ. | 8–14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10–12 | பட்டாணி | ரூ. | 100–00 |
| புடலை | ரூ. | 14–20 | பூண்டு | ரூ. | 95–00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 20–26 | கறிவேப்பிலை | ரூ. | 10–12 |
| சுரைக்காய் | ரூ. | 12–14 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 20–22 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| கொத்தவரை | ரூ. | 12–14 | குடைமிளகாய் | ரூ. | 34–40 |
| பூசணிக்காய் | ரூ. | 10–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 24–28 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 60–00 |
| மேரக்காய் | ரூ. | 18–20 | கறிபீன்ஸ் | ரூ. | 28–30 |
| பச்சை மிளகாய் | ரூ. | 14–28 | புஸ்பீன்ஸ் | ரூ. | 40–42 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–00 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 24–30 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 13–00 | மாங்காய் | ரூ. | 8–12 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 20–28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–24 | கொய்யா1கிலோ | ரூ. | 28–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 26–00 | மாதுளை1கிலோ | ரூ. | 50–95 |
| கருணைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | மாம்பழம் | ரூ. | 25–50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 115–135 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 40–00 |
| முள்ளங்கி | ரூ. | 15–17 | நெல்லிக்காய் | ரூ. | 28–30 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–20 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12–18 | வெள்ளரி | ரூ. | 10–26 |
| நூல்கோல் | ரூ. | 22–24 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 34–36 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 22–24 | அவரை | ரூ. | 36–38 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | நிலக்கடலை | ரூ. | 34–36 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |
| புதினா | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 14–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25600 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 26,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 27,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 10,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11,500 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10100 |
| கொப்பரை நாடன் | ரூ. 6700 |
| கொப்பரை ராசு | ரூ. 6800 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6850 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7750 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23300 |
| ரப்பர் பால் | ரூ. 14300 |
| காப்பி | ரூ. 11000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6100 |
| நேந்திரகாய் | ரூ. 1750 |
| இஞ்சி | ரூ. 1150 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜுன்.15–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,550 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.185.00 | அதிகபட்சவிலை | ரூ.262.00 |
| சராசரி விலை | ரூ.161.57 | சராசரி விலை | ரூ.246.70 |
| குறைந்தபட்சவிலை | ரூ.128.00 | குறைந்தபட்சவிலை | ரூ.235.00 |

**பட்டு நூல் ரூ.1,618**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,704.00 | 16,704.00 | 16,680.00 |
| ஒரு கிராம் | 2,088.00 | 2,088.00 | 2,085.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 53,175.00 | 56,900.00 | 56,500.00 |
| ஒரு கிராம் | 56.90 | 56.90 | 56.50 |

## தமிழ்நாட்டில் உணவு பழக்கம் மாறிவருகிறது

# கோதுமை உணவில் ஆர்வம் காட்டும் பொதுமக்கள்

சென்னை, ஜூன்.16-

தமிழ்நாட்டில் உணவு பழக்கம் மாறி வருவதால் அதிகமான பேர் கோதுமை உணவை சாப்பிட தொடங்கியுள்ளனர்.

### உணவு பழக்க வழக்கம்

தமிழ்நாட்டில் முன்பெல்லாம் காலையில் சாப்பாடு, மதியம் சாப்பாடு, இரவும் சாப்பாடு என்ற நிலையில் உணவு பழக்க வழக்கம் இருந்து வந்தது. ஆனால் சமீப காலமாக உணவு பழக்க வழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது.

ஒரு குடும்பத்தில் கணவன்-மனைவி ஆகிய இருவரும் வேலைக்கு செல்வதால் அவசர அவசரமாக சமையல் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சாப்பாடு தயார் செய்ய வேண்டும் என்றால் நீண்ட நேரம் ஆகி விடுகிறது. இது மட்டும் அல்லாமல் சாப்பாட்டுக்கு குழம்பு, ரசம், பொரியல், கூட்டு தயார் செய்ய வேண்டியது உள்ளது.

**அரிசி விலை குறைந்து வருகிறது**

எனவே தமிழக மக்கள் மாறி வரும் காலத்திற்கு தகுந்தபடி உணவு பழக்க வழக்கங்களை மாற்றி வருகிறார்கள். அதாவது வெளிநாடுகளை போல காலையில் கோதுமை உணவை சாப்பிட தொடங்கியுள்ளனர்.

அதாவது காலை, மாலையில் கோதுமை உணவையும், மதியம் ஒரு வேளை மட்டும் அரிசி சோறு சாப்பிடுகிறார்கள். இது மட்டும் அல்லாமல் தற்போது காலையில் ஓட்ஸ் சாப்பிடுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

### ரேஷன் கடையில் இலவச அரிசி

தமிழ்நாட்டில் ரேஷன் கடைகளில் 20 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இந்த அரிசி தரமானதாக இருப்பதால் பொதுமக்கள் ரேஷன் அரிசியை விரும்பி வாங்கி சாப்பிடுகிறார்கள். இதனால் தமிழ்நாட்டில் வெளிமார்க்கெட்டில் அரிசி, நெல் விற்பனை மந்தமாக உள்ளதாக வியாபாரி ஒருவர் கூறினார். தமிழ்நாட்டில் திருச்சி, தஞ்சாவூர், ஆரணி, திண்டிவனம், காஞ்சீபுரம் போன்ற பகுதிகளில் நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது. எனவே அரிசி விலை குறைந்து வருகிறது.

மத்திய அரசு இந்தியா முழுவதும் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு சர்க்கரை ஒதுக்கீடு அளவை அதிகரித்திருப்பதாலும், கரும்பு விளைச்சல் அதிகரித்திருப்பதாலும் சர்க்கரை விலை சரிந்துள்ளது. கடந்த மாதம் 100 கிலோ சர்க்கரை மூட்டை ரூ.2,900-க்கு விற்பனையாது, தற்போது ரூ.2,700 ஆக குறைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் மற்றும் பர்மாவில் இருந்தும் உளுந்து வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் கடந்த மாதம் முதல் ரக உளுத்தம்பருப்பு கிலோ 80-க்கு விற்பனையானது, தற்போது ரூ.70 ஆகவும், 2-வது ரக பர்மா உளுத்தம்பருப்பு கடந்த மாதம் கிலோ ரூ.70-க்கு விற்பனையாது, ரூ.60 ஆகவும் சரிந்துள்ளது.

### துவரம்பருப்பு விலை வீழ்ச்சி

வட மாநிலங்களில் நல்ல விளைச்சல் காரணமாக துவரம்பருப்பு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. 100 கிலோ துவரம்பருப்பு மூட்டை கடந்த மாதம் ரூ.6,500-க்கு விற்பனையானது, ரூ.5,500 ஆகவும், 2-வதுரக உளுத்தம்பருப்புமூட்டை கடந்த மாதம் ரூ.6,000-க்கு விற்பனையானது, ரூ.5,000 ஆகவும் குறைந்துள்ளது. சேலம் மஞ்சள் கடந்த மாதம் கிலோ ரூ.200-க்கு விற்பனையாது, ரூ.140 ஆகவும், ஈரோடு மஞ்சள் கடந்த மாதம் கிலோ ரூ.170-க்கு விற்பனையானது, ரூ.110 ஆகவும் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த ஆண்டு குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பூண்டு விளைச்சல் குறைவாக இருந்தது. இதனால் கடந்த ஆண்டு ஒரு கிலோ பூண்டு ரூ.250 வரை விற்பனையானது.

இந்த ஆண்டு நல்ல விளைச்சல் காரணமாக கடந்த மாதம் முதல் ரக நாட்டு பூண்டு ஒரு கிலோ ரூ.120-க்கு விற்பனையானது, தற்போது ரூ.90 ஆகவும், இரண்டாம் ரக நாட்டு பூண்டு கடந்த மாதம் கிலோ ரூ.100-க்கு விற்பனையாது, ரூ.70 ஆகவும் குறைந்துள்ளது.



உள்நாட்டில் தயாராகும் தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் விலை குறைந்து வரும் நிலையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பாமாயில், சன்பிளவர் ஆயில் விலை உயர்ந்து வருவதால் வியாபாரிகள் மற்றும் நடுத்தர மக்கள் கவலை அடைந்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் பாமாயில் தயார் செய்யும் நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான டன் பாமாயில், சன்பிளவர் ஆயிலை இருப்பு வைத்து கொண்டு, செயற்கையான விலை உயர்வை ஏற்படுத்திவருவதாக கூறப்படுகிறது.

### பதுக்கல்காரர்கள்

கடந்த மாதம் ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.54-க்கு விற்பனையானது, ரூ.59 ஆகவும், கடந்த மாதம் சன்பிளவர் ஆயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.74-க்கு விற்பனையானது, ரூ.79 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதேபோல கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் புளி, மிளகாய் வத்தல் விளைச்சல் நன்றாக இருந்தாலும், இவற்றின் விலை குறையவில்லை. கடந்த மாதம் ஒரு கிலோ புளி ரூ.80-க்கு விற்பனையானது, தற்போது ரூ.110 ஆகவும், கடந்த மாதம் ஒரு கிலோ குண்டு மிளகாய் வத்தல் ரூ.90-க்கு விற்பனையானது, தற்போது கிலோ ரூ.120 ஆகவும், கடந்த மாதம் ஒரு கிலோ நீட்டு மிளகாய் வத்தல் ரூ.70-க்கு விற்பனையானது, தற்போது ரூ.100 ஆகவும் விலை உயர்ந்துள்ளது என்று அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

இதற்கு முக்கிய காரணம் பெரிய வணிகர்களும் வியாபாரிகளும் விளையும் இடங்களுக்கே சென்று விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து குளுகுளு வசதி கொண்ட குடோன்களில் புளி, மிளகாய் வத்தலை பதுக்கி வைத்திருப்பதுதான் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட பதுக்கல்காரர்கள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாகும்.

தினகரன்

# ஒரே மாதத்தில் தேங்காய் எண்ணெய் விலை கிலோ ரூ.10 அதிகரித்தது

பதிவு செய்த நாள் 6/16/2011 1:01:10 AM



ஈரோடு : ஒரே மாதத்தில் கடலை, சூரியகாந்தி, தேங்காய் எண்ணெய் விலை கிலோ ரூ.10, நல்லெண்ணெய் ரூ.5 உயர்ந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 250 கடலை, சூரியகாந்தி, நல்லெண்ணெய் உற்பத்திக்கூடங்கள், திருப்பூர் பகுதியில் 140 தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கூடங்கள் உள்ளன. இவை தமிழகம் மட்டுமின்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.  எண்ணெய் வியாபாரி பாண்டுரங்கன் கூறியதாவது:

கடந்த மாதம் ரூ.1300க்கு விற்ற 15 கிலோ கடலை எண்ணெய் தற்போது ரூ.1450. ரூ.1450க்கு விற்ற தேங்காய் எண்ணெய் ரூ.1600.ரூ.1060க்கு விற்ற சூரியகாந்தி எண்ணெய் ரூ.1185. ரூ.1140க்கு விற்ற நல்லெண்ணெய் ரூ.1225 ஆக விலை உயர்ந்துள்ளது. கடலை, தேங்காய், சூரியகாந்தி எண்ணெய் லிட்டருக்கு ரூ.10 வீதமும், நல்லெண்ணெய் லிட்டருக்கு ஸி5ம் உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துகள் உற்பத்தி குறைவு, ஆன்லைன் வர்த்தகம் உள்ளிட்ட காரணங்களாலும், எண்ணெய் விலை உயர்ந்துள்ளது என்றார்.